**Tiaano®** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 100% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to June 12 : 582 Nos.
  - Up to May 12 : 567 Nos.
- **Performance June 12 ...**
  - Turnover growth : 3.48%
  - Employment growth : - 0.56%
  - 100% Attendance : 8.47%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




## உண்மை

புனிதமான விதி ஒன்று இருக்கிறது. "உண்மை என்றும் இறந்ததில்லை பொய்மை நிலைத்ததில்லை" என்பது தான் அது. தற்காலிகமாக பொய்மை சிலிர்ப்பைக் கொண்டு வரும். நாணமின்மையும் அப்படியே சிலிர்க்கச் செய்யும் ஆனால் இறுதியில் உண்மை எனும் படகை இங்கும் அங்குமாக ஆடச்செய்யும், ஆனால் என்றைக்கும் அது கவிழ்ந்ததாக சரித்திரம் கிடையாது.

பொய்மையின் காரணமாக செய்யப்பட்ட தவறுகளோ, ஏமாற்று வேலைகளோ நிச்சயமாக தவறான எதிர்விளைவுகளைக் கொண்டு வரும். எவரிடமிருந்து அவை வெளிவந்தனவோ அவரையே மீண்டும் வந்து தாக்கும். நமது செயல்களுக்கு விளைவுகள் தாமதப்படலாம். ஆனால் என்றைக்கும் தாக்காமல் போகாது. நல்லவற்றிற்கு என்றைக்கும் தவறாது பரிசு கிடைக்கும். அதே போல தீமைகளுக்கும் தவறாது தண்டனையும் கிடைக்கும். உள்ளும் புறமும் ஒரே குணத்தோடு இருந்து நம் எண்ணங்கள், சொற்கள் மற்றும் செயல்பாடுகள் அனைத்திலும் ஓர் ஒருமைப்பாடு கொண்டுவர வேண்டும். ஆனால் யதார்த்த உலகில் ஒவ்வொருவருக்கும் இரு முகங்கள் இருப்பது போல பழகுகிறார்கள். ஒன்று உண்மையானது, மற்றொன்று பொய்யானது. இரண்டாவது முகத்தைதான் பெரும்பாலும் மற்றவர்களுக்கு காட்டுகிறார்கள். ஆதலால் அவர்களுடைய உள்ளும் புறமும் ஒன்றாக இருப்பதில்லை.

உண்மையை யாரும் மறைக்கவே முடியாது. அதற்கு ஒரு துடிப்பு உண்டு. உண்மை வெளியாகும் வரை உறங்காது. நம்முடைய நற்காரியங்கள் கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் நேர்மை, நாணயம், ஒழுங்கு இவற்றை மாறாது கடைப்பிடிப்போம்.

உயர்ந்த மனநிலைதான் நல்வாழ்க்கையாக அமைகிறது. வலிமையைத் தருகிறது. அத்தகைய மனநிலை இல்லாமற்போனால் அறிவாற்றல் எவ்வளவு தான் வேலை செய்தாலும் கடவுளை அடைய முடியாது. உணர்ச்சிவசப்படாதவர்களும், பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்வோம், கடவுளின் காலடியில் நம் ஆன்மாவை அர்ப்பணிப்போம்.

அப்போது மிகுதியான ஆற்றல் வந்து சேரும். உதவிகள் வந்து குவியும், அசைக்கவே முடியாத உறுதியாக மாபெரும் வலிமை வல்லமையுடன் வந்து சேரும். பெரிய மரத்தின் மீதுதான் புயல்காற்று மோதுகிறது. கிளறிவிடுவதனால் நெருப்பு மேலும் நன்றாக எரிகிறது.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## கடவுளோடு ஒரு நேர்காணல்

**மனிதன் :** இந்த மனித இனம் குறித்து உங்களை அதிகமாக வியப்பிற்கு ஆளாக்குவது எது?

**கடவுள் :** இனிமையான குழந்தைப் பருவம் அவர்களுக்கு விரைவில் போரடித்து விடுகிறது. சலிப்படைகிற அவர்கள் விரைவில் வளர்ந்து பெரியவர்களாக வேண்டுமென விரும்புகின்றனர். பிறகோ மீண்டும் குழந்தைகளாக இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். தங்களது ஆரோக்கியத்தை இழந்து பணத்தை தேட ஓடுகின்றனர். பிறகே பணத்தை இழந்து ஆரோக்கியத்தை மீண்டும் பெற முயற்சிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கவலையோடும் படபடப்போடும் சிந்திப்பதாக நிகழ்காலத்தை மறந்துவிடுகின்றனர். இதன் காரணமாக நிகழ்காலத்தில் அவர்கள் வாழ்வதில்லை; எதிர்காலத்திலும் வாழ்வதில்லை; ஒருபோதும் இறக்கப்போவதில்லை என்பதைப் போல வாழ்கின்றனர்; ஆனால் இந்த உலகில் ஒரு போதும் வாழ்ந்திராதவர்களைப் போல இறக்கின்றனர்.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

## FUNCTIONAL WISHES







**Independence Day**
**15th August**

**Ramzan**
**20th August**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel : 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel : 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை
வளர்ப்பினிலே!

**Mr. T. Balasubramanian** **8th Aug**
Fib Tec



**Mr. P. Suresh Baskar** **13th Aug**
Facilitation

**Miss. P.E. Nancy** **19th Aug**
Director - Admin

**Mr. M. Vinodh Kumar** **22nd Aug**
Coating

**Mr. S. Santha Kumar** **27th Aug**
Administration

**Mr. S. Renjith Kumar** **29th Aug**
Coating

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

உலகப் புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானி எர்னஸ்ட் ரூதர்ஃபோர்ட், அவரது ஆய்வுக்கூடத்தில் ஒரு மாணவன் இரவும் பகலும் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தான். அதன் மூலம் ரூதர்ஃபோர்டின் கவனத்தைக் கவர வேண்டும் என்பது அந்த மாணவனின் திட்டம்.

ஒரு நாள் அவனை அருகே அழைத்தார் ரூதர்ஃபோர்ட், “இரவும் பகலும் கடுமையாக உழைக்கிறாயா இளைஞனே” என்று கேட்டார். அதற்கு அந்த மாணவனும் “ஆமாம் ஐயா, நேரம் காலம் பார்க்காமல் ஓயாமல் உழைத்துக் கொண்டே இருக்கிறேன்” என்று பெருமிதமாகச் சொன்னான்.

“அப்படியா, அதுசரி, எப்போதும் உழைத்துக் கொண்டே இருந்தால் எப்போதுதான் சிந்திப்பாய்?” என்று கேட்டுவிட்டு அமைதியாக நகர்ந்தார் ரூதர்ஃபோர்ட். நாம் ஒரு வேலையைச் செய்வது முக்கியமல்ல, அதை எதற்காக செய்கிறோம் என்று புரிந்துக் கொண்டு செய்வது மிகவும் அவசியமாகும்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### சோதனைகளை சாதனையாக மாற்றிய மாணவன்!



இராமநாதபுரம் மாவட்டத்தில் மூக்கையூர் எனும் கிராமத்தை சேர்ந்தவன் மாரிச் செல்வம். 8 ஆம் வகுப்பு வரை படித்த மாரி மேற்கொண்டு படிப்பைத் தொடர வேறு பள்ளிக்குச் செல்ல வேண்டி இருந்தது. தன் குடும்பத்தின் வறுமை காரணமாக மேற்படிப்பு வேண்டாம் என்று முடிவு செய்து தன் தந்தைக்கு உதவியாக கடலுக்கு மீன் பிடிக்கும் தொழில் செய்யப் போவதாக தந்தையிடம் கூறினான். ஆனால் அவன் தந்தை PAD நிறுவனத்தின் மூலம் உதவிப்பெற்று தந்து மேற்கொண்டு படிக்கச் சொன்னார்.

மாரியும் தன் தந்தைச் சொல்லுக்கு இணங்க தன் அக்காவீட்டில் தங்கி மேற்படிப்புத் தொடர்ந்தான். 10 ஆம் வகுப்பு இறுதித் தேர்வு நெருங்கியது. இந்தச் சூழ்நிலையில் அவன் தந்தைக்கு ஏற்கனவே மூளையில் இருந்த கட்டி காரணமாக சிகிச்சை பலன் இன்றி இறந்துபோனார். துவண்டு போன மாரியை அவன் தாயும் அக்காவும் தேற்றி பள்ளிப் படிப்பைத் தொடரச் செய்தனர்.

தேர்வு நாளும் வந்தது. இரண்டு தேர்வுகள் எழுதி முடித்திருந்தான். மூன்றாவது தேர்வுக்குத் தயாராக படித்துக் கொண்டிருந்தான். அன்று இரவு அவன் அக்காவிற்கு நெஞ்சுவலி ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில் இறந்துபோனார். கதறி அழுத மாரியை “நாளைய தேர்வுக்கு நீ படிக்கனும் உன் அக்காவும் அதைத்தான் ஆசைப்பட்டா” என்று தேற்றி அவனைப் படிக்கச் செய்தனர் தாயும் உறவினரும். தன்னைத் தாயாக இருந்து பார்த்துக் கொண்ட அக்காவின் பிணத்தருகே இருந்து படித்தான். மறுநாள் தேர்வு எழுதிவிட்டு வந்து தன் அக்காவுக்கு இறுதி சடங்கு செய்துவிட்டு மறுநாள் தேர்வுக்குப் படிக்கத் தொடங்கினான் மாரி. தேர்வுகள் எழுதி முடித்தான்.

தேர்வு முடிவுகள் வெளிவந்தன. அனைவரும் தேர்ச்சி முடிவுகள் பற்றி அறிந்துக்கொள்ள ஆவலுடன் இருந்த நிலையில் மாரி மட்டும் தன் தாயாருக்கு உதவியாக கரிமூட்டம் அள்ளும் வேலையில் ஈடுபட்டிருந்தான். இராமநாதபுரம் மாவட்டத்தில் பலரும் அறிந்திராத மூக்கையூர் எனும் குக்கிராமத்தை மாவட்டத்தின் முதல் மாணவனாக மதிப்பெண் எடுத்து பலரும் அறிய செய்தான். அவன் எடுத்த மதிப்பெண் **தமிழ் 95, ஆங்கிலம் 98, கணிதம் 100, அறிவியல் 99, சமூக அறிவியல் 98 மொத்தம் 490 மதிப்பெண்.**

இத்தனை இன்னல்களையும் தாங்கி ஒரு ஏழைச் சிறுவனால் சாதிக்க முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது. கண்டிப்பாக முடியும். சாதிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை மட்டுமே நம் அனைவருக்கும் வேண்டும்.

Compiled by : Mrs. Shahin
Marketing

## தெரிந்து கொள்வோம்

**சிறுநீரகக் கல்லுக்குத் தீர்வு**

இன்றைய உணவுப் பழக்கத்தினால் சிறுநீரகக்கல் பிரச்சினை என்பது பெரும்பாலானவர்களுக்கு சாதாரணமாகி விட்டது. சிறுநீரகத்தில் கல் இருந்தால் அதை நாம் வீட்டிலிருந்தபடியே எளிதான முறையில் நீக்கிவிடலாம்.

முதலில் ¼ kg பிரென்ச் பீன்ஸ் வாங்கி விதையை நீக்கி தண்ணீரில் (குறைந்தது 2 மணிநேரம்) கொதிக்க வைத்து, பின் மிக்ஸியில் நன்றாக அரைத்து குடிக்க வேண்டும். 10 நிமிடம் கழித்து 2 லிட்டர் தண்ணீரை குடிக்க வேண்டும். ஒரே முறையில் முடியவில்லை என்றால் சிறிது நேரம் விட்டு விட்டு குடிக்க வேண்டும், இன்னும் அதிகமாக குடிக்க முடிந்தால் நலம்.

தொடர்ந்து 10 மணி நேரத்திற்கு நம்மால் முடிந்தவரை தண்ணீரை பருக வேண்டும். கல்லானது சிறுநீரகத்திலிருந்து சிறு பைப் வழியாக சிறுநீர் பைக்கு சென்றடைகிறவரையிலும் வலி கொடுமையானதாக இருக்கும் அதன்பின் சிறுநீர்பையிலிருந்து சிறுநீர் பாதையை அடைத்துக் கொண்டு சிறுநீர் வரும். ஆனால் வராது.

பயந்துவிடாமல் நாம் பருகும் நீரின் அளவை அதிகரிக்க வேண்டும். சிறுநீர்பை நிறைந்து சிறுநீர் கழிப்பது கட்டுப்படுத்தாத நிலைவரும். அப்போது அதிக அழுத்தத்துடன் சிறுநீர் கழித்தால் கல் வெளியே வந்துவிடும். சில சமயம் கற்கள் உள்பாதையில் கிழித்து இரத்தமும் வரலாம். அது ஒரே நாளில் சரியாகி விடும்.

இந்த முறையில் பக்க விளைவுகள் இல்லாததால் தைரியமாக பின்பற்றலாம்.

**சிறுநீரக்கல் உருவாகாமல் இருக்க ஒரு சில வழிமுறைகள்.**

1. துளசி இலைச் சாற்றுடன் தேன்கலந்து ஆறு நாட்கள் சாப்பிடவேண்டும்.
2. ஆப்பிள், திராட்சை, தர்பூசணி, இளநீர், வாழைத்தண்டு ஜூஸ் இவற்றை நம் உணவில் அடிக்கடி சேர்க்க வேண்டும்.
3. மேற்சொன்ன அனைத்தையும் எவ்வளவு உட்கொண்டாலும், குடிக்கும் தண்ணீரின் அளவு (தினமும் 2 லிட்டரிலிருந்து 3 லிட்டர்வரை) குறைந்தால் கல் உருவாவது நிச்சயம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

Collected in Internet

**கணினியின் (Beep) ஒலி**

கணினி ஆன் செய்தவுடன் BIOS ஆனது booting நேரத்தில் கணினியின் பாகங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என சோதிக்கும். அப்படி ஏதாவது ஒரு சில கணினியின் பாகங்களில் கோளாறு என்றால் உடனே கணினியில் இருந்து பீப் ஒலி ஒலிக்கத் தொடங்கும். அப்படி ஒலிக்கும் ஒலியின் எண்ணிக்கையை வைத்து நாம் கணினியில் எங்கு சிக்கல் இருக்கிறது என நாமே கண்டுபிடித்துவிடலாம்.

| ஒலி (Beep) | சரிபார்த்தல் / சோதித்தல் | பாதிப்பு ஏற்பட்டிருக்கும் பாகம் |
|---|---|---|
| ஒரு முறை | RAM யை சரிபார்க்கவும். | RAM இணைப்பில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். |
| இரண்டு முறை | RAM யை சரிபார்க்கவும். | மின்கலச் சுற்றில் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| மூன்று முறை | RAM யை சரிபார்க்கவும். | RAM பழுது அடைந்திருக்கலாம். |
| நான்கு முறை | Mother Board யை சரிபார்க்கவும். | System Memory ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| ஐந்து முறை | Mother Board யை சரிபார்க்கவும். | Processor ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| ஆறு முறை | Key Board Controller Chip னை சரிபார்க்கவும். | KeyBoard Controller மற்றும் Gate – A20 ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| ஏழு முறை | Video Card யை சரிபார்க்கவும். | Virtual mode exception ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| எட்டு முறை | Video Card யை சரிபார்க்கவும். | Display Memory ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| ஒன்பது முறை | Mother Board ன் BIOS Chip னை மாற்ற வேண்டும். | BIOS Chip ல் பிழை ஏற்பட்டிருக்கலாம். |
| பத்து முறை | CMOS Board னை சரிசெய்யவும். | CMOS Shutdown Registry ல் தவறு ஏற்பட்டிருக்கலாம். |
| இடைவிடாத நீண்ட ஒலி | VGA Card னை சரிசெய்யவும். | VGA Card பழுது அடைந்திருக்கலாம். |

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XI)

**நமக்குள் ஓர் அணில்**

பழைய பொருள்களைச் சேகரித்து வைப்பதோ, பின்னாட்களில் அவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு ‘ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே!’ என்று பாட்டுப் பாடி மலரும் நினைவுகளில் திளைப்பதோ தவறே இல்லை. ஆனால், அதுபோன்ற பழம்பொருள்களுக்கெல்லாம், டிரங்குப் பெட்டிக்குள் இருந்தால்தான் அதிக மரியாதை என்கிற காவிய உண்மையையும் மறந்துவிடக் கூடாது.

இதே போல், சமையலறையில் கைக்குக் கிடைக்கும் தூரத்தில் வைக்கப்பட்டிருக்கும் கரண்டிதான் சாம்பாருக்குப் பயன்படும், அதே கரண்டி பூஜை அறையிலோ பாத்ரூமிலோ தென்பட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

அதாவது, எந்த இடத்தில் எதை வைக்கவேண்டும், எதையெல்லாம் வைக்கக்கூடாது. என்று கண்டறிவதுதான் ‘5S’ ன் முதல் சூத்திரமான ‘செய்ரி’யின் அடிப்படைத் தத்துவம்.

## கவிதைகள்

### அடிமையாகாதே



போதைக்கு அடிமையாகாதே,
புதை குழியில் வீழ்ந்திடுவாய்!
மாதுக்கு அடிமையாகாதே,
மதிகெட்டு அலைந்திடுவாய்!
சூதுக்கு அடிமையாகாதே,
சுற்றத்தை இழந்திடுவாய்!
பணத்திற்கு அடிமையாகாதே,
குணத்தை இழந்திடுவாய்!
புகழ்ச்சிக்கு அடிமையாகாதே,
மகிழ்ச்சியை இழந்திடுவாய்!
தூண்டுதலுக்கு அடிமையாகாதே,
தூண்டிலில் மாட்டிக்கொள்வாய்!
புலன்களுக்கு அடிமையாகாதே,
பலன்களை இழந்திடுவாய்!
கோபத்திற்கு அடிமையாகாதே,
ஆபத்தில் வீழ்ந்திடுவாய்!
உணர்ச்சிக்கு அடிமையாகாதே,
உன்னையே நீ இழந்திடுவாய்!
அன்பிற்கு அடங்கு, அறிவுக்கு அடிபணி
அத்தனையும் பெற்றிடுவாய்!!!
(ஓர் ஆயுள் கைதியின் அறையில் கண்ட வாசகம்)

Compiled by : Mr. P. Gopalakrishnan
Production

## சிந்தனைக்கு

- ஒரு செயலை செய்து முடிக்கிறவரை, அது சாத்தியமில்லாதது போலவே தான் தோன்றும்.
- நமது சிந்தைனையின் அடிப்படையிலேயே நமது எண்ணங்களும், வார்த்தைகளும் செயல்களும் வருகின்றன.
- **உத்வேகம் அளிக்கும் மந்திரம் :** ஆயிரம் மைல்கள் தூரமுள்ள ஒருநீண்ட பயணமும்; மனஉறுதியோடு திட்டமிட்டபடி எடுத்து வைக்கும் ஒரு முதல் அடியிலிருந்து தான் தொடங்குகிறது.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

### அறிவிப்பு

→ நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவினை முன்னிட்டு ஸ்டால் போட விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய விவரங்களை திரு. T. பாலசுப்ரமணியன் (9965086270) அவர்களிடம் முன்பதிவு செய்து கொள்ளுமாறும் மற்றும் வருடாந்திர ஞாபகார்த்த மலர் (Souvenir) வெளியிட இருப்பதால் கவிதைகள், கட்டுரைகள் முதலியவற்றை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (webmaster@tianode.com) அவர்களிடம் கொடுக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சென்ற வருடம் ஸ்டால் வைத்தவர்களின் விவரம் பின்வருமாறு.

1. புத்தகம்– M/s.தி ஓசியன், Mr. பாலச்சந்திரன்(R&D)
2. டிஷ் டிவி – Mr. சேர்மக் கனி
3. கைவினைப்பொருட்கள் – Mrs. P. வசந்தா

இப்படிக்கு
விழாக்குழு

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

'செய்ரி' என்ற ஜப்பானியச் சொல்லுக்கு இணையாக, Sort, Structurise, Sort-out, Systematisation, Simplify உள்ளிட்ட பல 'S' வரிசை ஆங்கில வார்த்தைகள் சொல்லப்படுகின்றன. இவை ஒவ்வொன்றின் அகராதி அர்த்தத்தையும் படித்துக் குழப்பமடையாமல், இந்தச் 'செய்ரி' எப்படித் தோன்றியது, எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதைப் பார்க்கலாம்.

உலக அளவில் தொழில்துறையில் சிறந்து விளங்கும் ஜப்பானின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் – சாப்பாடு, தண்ணீர் போன்ற அத்தியாவசியங்களோடு அவர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளின் உற்பத்தி சமாசாரத்தையும் சேர்த்துக் கொண்டிருப்பதுதான்.

ஒரு வேளை சாப்பிடாவிட்டால், நமக்கெல்லாம் உடம்பு பலவீனப்பட்டு நடுங்கத் தொடங்கிவிடுகிறது. அதேபோல்தான், ஜப்பானியர்களின் தொழிற்சாலைகளில்! ஏதேனும் ஒரு காரணத்துக்காக உற்பத்தி தடைப்பட்டால் அல்லது குறைந்தால், அவர்கள் பதற்றமாகிவிடுவார்கள். என்ன ஆச்சு, ஏன் ஆச்சு, இதை எப்படிச் சரி செய்வது என்று தீவிரமாக ஆராயத் தொடங்கிவிடுவார்கள்.

அப்படிப்பட்ட ஆய்வு ஒன்றின்போதுதான், முக்கியமான ஓர் உண்மை கண்டறியப்பட்டது. சுத்தமான, ஒழுங்கான தொழிற் சாலைகளோடு ஒப்பிடும்போது, அழுக்கான, காயலான் கடைபோல் பொருள்களைக் குவித்து வைத்திருக்கும் தொழிற்சாலைகளால் அவ்வளவு சிறப்பாகச் செயல்பட முடிவதில்லை. அவற்றின் உற்பத்தி மிகக் குறைவாகவே இருக்கிறது.

இந்த விஷயம் தெரிந்த பிறகு, ஜப்பானியர்களால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது செய்து இதைச் சரிப்படுத்தியாக, வேண்டும் என்று அவர்கள் மெனக்கெட்டு உழைத்ததுதான், '5S' கொள்கைகளுக்கான விதை.

உலகம் முழுவதும் பெரும்பாலானோர் தொழிற்சாலை என்றாலே, அழுக்கான, ஒழுங்கில்லாத இடம் என்று நினைத்துக் கொண்டிருக்கையில், அது அப்படி இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று விளக்குமாற்றைக் கையில் எடுத்துக் கொண்டார்கள் ஜப்பானியர்கள்.

தொடரும்…

## 10th Staff Day Innagural Celebrate on July 2012

